[19th February 1959

VIDWAN T. MUTHUKANNAPPAN : எவ்வளவு வருமானத்திற்குக் குறைந்தவர்கள் இந்த "லோ" இன்கம் க்ரூப்-இல் சேர்க்கப்படுகிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : வருஷத்திற்கு ஆறுயிரம் ரூபாய்க்குக் குறைவாக வருமானமுள்ளவர்கள் இதில் சேர்க்கப்படுகிறார்கள்.

SRI V. V. RAMASWAMI : மலைத் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டம் வகுக்கப்படுமா ? கடன் கொடுக்கவேண்டும் என்று அவர்களிடத்திலிருந்து ஏதாவது மனுக்கள் வந்திருக்கின்றனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவர்களுக்கும் கடன் கொடுப்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதுவரை இந்த வருஷத்தில் மூன்று நான்கு மனுக்கள் வந்திருக்கின்றன.

VIDWAN T. MUTHUKANNAPPAN : இந்தத் திட்டங்களின்படி வேண்டிய பண உதவி பெறுவதற்கு அதிகமான காலதாமதம் ஏற்படுகிறது. அப்படி ஏற்படாமல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : காலதாமதம் ஆகியிருந்தால் கூடுதலாக நாம் பணம் செலவு செய்திருக்க முடியாது.

SRI K. V. RAMASWAMY : விவசாயிகள் அவரவர்களுடைய நிலங்களில் மனைகள் கட்டிக்கொள்வதற்கு அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு இந்தத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்கு வேறு திட்டம் இருக்கிறது. ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் என்று வேறு திட்டம் இருக்கிறது. அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால், விபரமாகப் பதில் தெரிவிக்கலாம்.

Appointment of a Special Joint Registrar of Co-operative Societies

* 78 Q.—SRI V. V. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Government have sanctioned the appointment of a Special Joint Registrar of Co-operative Societies to study the various problems connected with the co-operative sugar mills; and

(b) if so, when the report will be submitted to the Government?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The report of the Special Officer is likely to be submitted to the Government in March 1959.

SRI V. V. RAMASWAMI : ஏற்கனவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு கூட்டுறவு டெபுடி ரிஜிஸ்டிரார் இருக்கும்போது, ஆலைகள் ஏற்படுத்துவதற்காக என்று தனியாக ஜாயிண்ட் ரிஜிஸ்டிரார் ஒருவரை நியமிக்க வேண்டிய காரணம் என்ன ? என்னென்ன வேலைகளை இவர் பார்த்துவருவார் ?

THE HON. SRI R. VENKATARAMAN : சென்னை ராஜ்யத்திலே இப்போது மூன்று சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். அதில் ஒவ்வொரு ஆலைக்கும் ஒரு கோடி ரூபாய் செலவாகும். மேலும், இந்த ஆலைகளுக்காக நிலங்கள் வாங்க வேண்டும். இதற்கான மெஷினரிகள் வரவழைக்க வேண்டும். மேலும் இது சம்பந்தமாக மத்திய சர்க்காரோடு கலந்து பலவிதமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இவைகளையெல்லாம் கவனித்துக்கொள்வதற்குத்தான் ஜாயிண்ட் ரிஜிஸ்டிரார் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

19th February 1959]

Sri T. PURUSHOTHAM : Will the Hon. Minister kindly enlighten us, Sir, on the progress made with regard to the mills referred to by him?

The Hon. Sri R. VENKATARAMAN : The Amaravathi Sugar Factory is putting up buildings and the erection of machinery will take place very soon. The Ambur Sugar Factory has just started installation of buildings.

Sri MOHAMED RAZA KHAN : With the blessings of four Ministers . . .

The Hon. Sri R. VENKATARAMAN : Of three, the fourth being absent.

Sri MOHAMED RAZA KHAN : Thank you for the information.

The Hon. Sri R. VENKATARAMAN : And it is also progressing satisfactorily. The Madurantakam Sugar Factory is caught up in disputes and it is not making progress.

Sri A. GAJAPATHY NAYAGAR : இந்த மூன்று ஆலைகளுக்கும் வேண்டிய நிலங்களைப் பதிவு செய்தாய்விட்டதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதுவரையிலும் நிலங்கள் பதிவு செய்யப்படவில்லை.

Sri V. V. RAMASWAMI : மதுராந்தகத்தில் அமைக்கப்படப்போகும் சர்க்கரை ஆலை மதுராந்தகம் தாலுகாவில் அமைக்கப்படுமா, அல்லது மதுராந்தகம் ஊரில் அமைக்கப்படுமா அல்லது மதுராந்தகம் தாலுகா படாளத்தில் அமைக்கப்படுமா என்பதை அறிய வேண்டுகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : அதுதான் இப்போது சண்டையில் இருந்துகொண்டிருக்கிறது. எங்கே அமைப்பது என்பது இன்னும் முடிவாகவில்லை.

Co-operative Joint Farming Societies

* 79 *Q.*—Sri M. ETHIRAJALU : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Co-operative Joint Farming Societies started during the year 1956–57 and 1957–58?

The Hon. Sri R. VENKATARAMAN : Two Co-operative Joint Farming Societies, viz., Valandur Joint Farming Society in Madurai district and Sivaganga Joint Farming Society in Chingleput district were registered in 1956–57. One society, viz., Nathagoundanpudur Joint Farming Society, Coimbatore district, was registered in 1957–58.

Sri M. ETHIRAJALU : அமைச்சர் அவர்கள் மதுரை, செங்கற்பட்டு, கோயம்புத்தூர் இந்த மூன்று ஜில்லாக்களிலும் கூட்டுறவுப் பண்ணைகள் ஏற்படுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். மற்ற ஜில்லாக்களிலும் இம்மாதிரிப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்குத் திட்டம் இருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்தக் கேள்வி 1956–57, 1957–58-ம் வருடத்தில் ஏற்படுத்தியிருப்பதைப்பற்றிக் கேட்கப்பட்டிருக்கிறது. 1958–59-ல் இன்னும் அதிகமான பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, அதாவது, வடாற்காடு ஜில்லாவில் மேய்ச்சேரி என்ற இடத்திலும்,